# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**ஆணை நாள்: 04.03.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

.............

**வழக்கு எண். SA10690/F/2023**

திரு. செ.ரங்கபாஸ் ... மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
வல்லம்,
விழுப்புரம் மாவட்டம் 604 206. ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **07.04.2023** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **09.05.2023** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **13.06.2023** |

******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் ஆணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய தின விசாரணையில் மனுதாரர் திரு.செ.ரங்கபாஸ் அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.ச.சுந்தரபாண்டியன், பொதுத் தகவல் அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், வல்லம், விழுப்புரம் மாவட்டம் மாவட்டம். அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 07.04.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், மனு எண் 5028849, ந.க.அ5/258/2022 நாள் 03.2023 தொகுப்பு வீடு மற்றும் தனிநபர் கழிப்பறை முறைகேடு தொடர்பாக மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நேரில் ஆய்வு செய்ய வருவது தொடர்பான ஆவண நகல்கள், கல்லடிக்குப்பம் கிராம ஊராட்சியில், 2022-2023 ஆம் ஆண்டுகளில் கூரை வீடுகளின் புகைப்படங்கள், பயனாளி பெயர் பட்டியல் விபரம் தகுதி பெற்றவர் விபரங்கள், பட்டியல் நகல்கள், கல்லடிக்குப்பம் கிராம ஊராட்சியில், 2012 முதல் 2022 ஆம் ஆண்டு வரை திரு.செந்தாமலைக் கவுண்டர் த/பெ சின்னையாக்கவுண்டர் மற்றும் திரு செ.ரங்கபாஸ், த/பெ செந்தாமரைக் கவுண்டர் ஆகிய இரண்டு நபர்கள் 1 AY, KVVT, தானே வீடு, தொகுப்பு வீடு, பசுமை வீடு திட்டம், பிரதம மந்திரி வீடு வழங்கும் திட்டத்தில் பயனாளி பட்டியலில் இடம் பெறாதமைக்கான தகவல் என்பது போன்ற தகவல்களை 10 இனங்களில் தகவலாக வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காத காரணத்தால், மனுதாரர் 09.05.2023 நாளிட்ட பிரிவு **19(1)-ன்** கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர், 12.05.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மனுதாரர் 13.06.2023 நாளிட்ட பிரிவு **19(3)இன்** கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஏற்கெனவே 12.05.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்களை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார். மேலும் ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தான் கோரியுள்ள தகவல்களை தர மறுக்கும் விதமாக பொதுத் தகவல் அலுவலர் செயல்படுவதாகவும், தொகுப்பு வீடு மற்றும் தனிநபர் கழிப்பறை கட்டுவதில் முறைகேடு உள்ளதாகவும், கழிப்பறை கட்டாமல் ரசீது போட்டு இணையதளத்தில் பணி முடிக்கப்பட்டது போல் காட்டியுள்ளதால், தனக்கு உண்மையான தகவல்களை தர மறுக்கும் பொதுத் தகவல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு முழுமையான தகவல்களை பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- ***மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்காமல் இருந்த திரு.வீ.நாகராஜன் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 17.03.2025 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.***

- *மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரிய அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு 17.03.2025 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA10690/F/2023**

**பெறுநர்**
பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
வல்லம்,
விழுப்புரம் மாவட்டம் 604 206.

**மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்**

திரு. செ.ரங்கபாஸ்,
த/பெ. செந்தாமரைக்கவுண்டர்,
பிள்ளையார் கோவில் தெரு,
கல்லடிக்குப்பம், கிழ்மாம்பட்டு அஞ்சல், செஞ்சி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் - 605 651

Copy to: Judgement File/ Spare.
JE/PA 05.03.2025